# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2190/21 - 2020 අගෝස්තු මස 24 වැනි සඳුදා - 2020.08.24

*2190/21 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 24 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: 7/3/1/2-10.

ஒரு பொதுத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதனை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ், நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ள எண்ணியிருக்கும் காணியின் விபரம்:-**

மத்திய மாகாணத்தின் மாத்தளை மாவட்டத்தின் பல்லேபொல பிரதேச செயலாளர் பிரிவில் உடுகொட உடசிய பத்துவ சிறுபிரிவில் ஹோமாபொல கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட க.கி.வ இல.42, குறைநிரப்பி இல. 13, பத்திர இல. 14 இல் துண்டு இலக்கம் 431 எனக் காட்டப்பட்டுள்ள சுமார் 0.0579 ஹெக்டயார் விஸ்தீரணம் கொண்ட எஹலேபொல தோட்டம் எனும் காணித்துண்டின் எல்லைகள்:

வடக்கு: துண்டு இல. 432; கிழக்கு: துண்டு இல. 432; தெற்கு: துண்டு இல. 432 மற்றும் மொரகஸ்பிட்டிய (க.கி.வ. 33); மேற்கு: மொரகஸ்பிட்டிய (க.கி.வ. 33).

மத்திய மாகாணத்தின் மாத்தளை மாவட்டத்தின் பல்லேபொல பிரதேச செயலாளர் பிரிவில் உடுகொட உடசிய பத்துவ சிறுபிரிவில் மொரகஸ்பிட்டிய கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட க.கி.வ இல.33, குறைநிரப்பி இல. 19, பத்திர இல. 18 இல் துண்டு இலக்கம் 373 எனக் காட்டப்பட்டுள்ள சுமார் 0.0054 ஹெக்டயார் விஸ்தீரணம் கொண்ட எஹலேபொல தோட்டம் எனும் காணித்துண்டின் எல்லைகள்:

வடக்கு: துண்டு இல. 254; கிழக்கு: ஹோமாபொல (க.கி.வ. 42); தெற்கு: துண்டு இல. 254; மேற்கு: துண்டு இல. 254.

இங்கு பொதுமக்கள் தேவையெனக் குறிப்பிடப்படுவது, பாரிய மாத்தளை நீர் விநியோகத்திட்டத்தின் வல்மோருவ நீர்த்தாங்கி அமைப்பதற்கான மாற்றுக் காணி எடுத்தலாகும்.

1A - G 32749 - 17 (2020/08)

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

உரிமை கோருபவர்: திரு. பஸ்நாயக்க முதியன்சேலாகே நிலவ கெதர தயாநந்த, ஹோமாபொல குடியேற்றம், நாலந்த.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2020 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 18ஆந் திகதி மு. ப 10.00 மணிக்கு பல்லேபொல பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும் படியும் மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈட்டுத் தொகைகளையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2020 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 19 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

எம். எம். சீ. ஏக்கநாயக்க,
பிரதேச செயலாளர்,
பல்லேபொல.

பிரதேச செயலகம்,
பல்லேபொல,
2020, ஓகத்து 20.

09 - 194

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.